தனிப்பிரதி அணா 1

REG. NO. M. 2997.

RÉPUBLIQUE FRANÇAISE

LIBERTÉ.—ÉGALITÉ.—FRATERNITÉ.

PULSATE ET APERIETUR VOBIS

# VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது



ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

LE RÉDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI.
Tamil Pandit
Jaffna
CEYLON.



Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER MADAM, NO. 2,
Pondichéry.


நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடு
வித்தகர்க் கல்லா லரிது. — குறள்.


காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. II. — புதுவை, யுவ ௵ ஆனி மீ ௧௩ உ (27—6—35) — NO. 31.


## திருமந்திரம்.

ஆமையோன் றேறி யகம்படி யானென
வோமவென் றேதியெம் முள்ளொளி யாய்நிற்குந்
தாம நறுங்குழற் றையலைக் கண்டபின்
சோம நறுமலர் சூடிநின் றுளே.

ஆமத் தினிதிருந் தன்ன மயத்தின
ளோமத்தி லேயு மொருத்தி பொருந்தின
ணும நமசிவ வென்றிருப் பார்க்கு
நேமத் துணைவி நிலாவிநின் றுளே.

பெற்றுள் பெருமை பெரிய மனோன்மணி
நற்று ளிறைவனே நன்பய னேயென்பர்
கற்று னறியுங் கருத்தறி வார்கட்குப்
பொற்று ளுலகம் புகறனி யாமே.

அம்மையு மத்தனு மன்புற்ற தல்லது
வம்மையு மத்தனு மாரறி வாரென்னை
யம்மையோ டத்தனு மியானு முடனிருந்
தம்மையோ டத்தனை யான்புரிந் தேனே.

கண்டிடு சக்கரம் விந்து வளர்வதாங்
கண்டிடு நாதமுந் தன்மே லெழுந்திடக்
கண்டிடு வன்னிக் கொழுந்தன வொத்தபின்
கண்டிடு மப்புறங் காரொளி யானதே.

காலரை முக்கான் முழுதென மந்திர
மாலித் தெழுந்தமைந் தூறி யெழுந்ததாய்ப்
பாலித் தெழுந்து பகையற நின்றபின்
மாலுற்ற மந்திர மாறிக்கொள் வார்க்கே.

உ

திருவருள் துணை.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானெடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.

[திருவாசகம்]

# வித்தகம்

புதுவை

யுவ ஸூ ஆனி மீ 13 உ

## சூது விரும்பேல்.

ஔவையார் அருளிச் செய்த "ஆத்திசூடி" என்னும் வேத சூத்திரக் கொத்துள் ஒன்றுகி மிளிரும் இவ் அமுத வாக்கியம் லௌகீகம் பாரமார்த்திகம் என்னும் இரண்டற்கும் உரியதாகின்றது. அஃது அன்னதாதல் ஈண்டு ஒரு சிறிது விளக்கமுற உரைக்கப்படுகின்றது.

சூதாடலை (நீ ஒருபோதும்) விரும்பாதே என உலகியலுக்கு ஒப்பிய பொருள் கூறப்படுகின்றது. உலகத்திலே அரசர்களும், செல்வப் பெருக்கினுல் உயரிய நிலையில் வீற்றிருப்போருட் பெரும்பாலாரும், முயற்சியின் நலம் அறியாத விடர் தூர்த்தர் முதலிய வீணர்களும் விநோதார்த்தமாகவும், முசிப்பு ஆற்றியின் பொருட்டும், பிறர் பொருளை வவ்வும் நோக்கம் கொண்டும் கவறு சதுரங்கம் முதலிய விளையாட்டுக்களை மேற் கொள்வர். இதனுல் உளதாகும் ஆயம் — தாயம் — வென்றி என்பது வஞ்சக நெறியாகிய சூது நெறியால் வருதலால் இவ் விளையாட்டுச் "சூது" என விதந்து கூறப்பட்டது என ஆம். இவ் விளையாட்டில் சமர்த்துடையோரும் சூதர் —வஞ்சர் எனப் பேசப்படுவர். பாரத வீரருள் ஒருவனுகிய துரியோதனன் மாமனும் காந்தார தேசத்து அரசனுமாகிய "சகுனி" என்பவனை வஞ்சகமான சூதாட்டத்தில் நிபுணன் என்ப. தற்காலத்தும் வஞ்சகமுடையாரைச் "சகுனி" என்பது "சகுனிமாமா" என்பது பெரு வழக்கு. பின் வரும் செய்யுட்கள் பஞ்ச பாண்டவர் அரசுரிமையை முறைகேடாக வவ்வும்படி சகுனி என்பவன் ஆடிய வஞ்சச்சூதை நன்று புலப்படுத்துகின்றன.

### வில்லிபுத்தூரார் பாரதம்.

அவிர்பசும்பொன்மீளியாளியாசனத்
[திழிந்துபூம்
தவிசிலொன்றிடப்புகுந்ததருமன்வைக,
[மாமனும்
நவிரறுந்திசைப்புறத்துநன்னிலங்குறித்து
[நீள்
புவிபெறுங்கருத்தினேடிருந்தன்போருந்
[தவே.

காயமுற்றும்வஞ்சமேகலந்ததன்னகள்வன்
[மேல்
நேயமுற்றுநின்றதானுநிகர்பிடித்தென்ன
[வே
மாயமுற்றகவறுமந்தமாமன்வல்லபத்திலே
தாயமுற்றிடங்கொடாதுதருமனைச்சதித்த
[தே.

(ஷை சூதுபோர்ச் சருக்கம் செ. 173, 188.)

சகுனியின் சூதே —வஞ்சச் சூதாட்டமே பாரத யுத்தத்துக்கு— குருகுல நாசத்துக்குக் காரணமாயிற்று என்றுல் சூதாட்டத்தினுல் உளவாகும் தீமைகள் என்னென்று உரைக்கப்படும்? இவ்வாறே புட்கரன் என்னும் அரசனும் நள மகாராஜனேடு சூதுவிளையாடி அன்னவன் அரசுரிமையை வவ்வி அவனையும் அவன் கற்பிற் சிறந்த அரும்பெறன் மனைவியாகிய தமயந்தியையும் நாடு துறந்து காடு புக்கு ஆற்றெணுப் பெருந்துயர் அடையச் செய்தனன். இன்னோரன்ன தீமை பயக்கும் சூதை —சூது விளையாட்டை வீணுள்படாது நன்றுற்றும் பெரியார் — இம்மை மறுமைப் பயனையும் காலத்தின் அருமை பெருமையையும் நன்றுணர்ந்த மேதாவிகள் விரும்புவரோ? சூதாட்டத்தால் விளையும் தீமைகளை நன்று புலப்படுத்தும் பிரமாணங்கள் சில இங்கே காட்டப்படுகின்றன.

### குறள்.

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(ஷை 92-ம் அதி. வரைவின்மகளிர் செ. 19.)

அன்பு நெறி தழுவாது வேறுபட்ட மனமுடைய பொருட் பெண்டிர் உறவும் நிறையில்லாக் கட்குடியும் சூதாடுதலும் சீதேவியால் துறக்கப்பட்டு மூதேவியால் குடிகொள்ளப்பட்ட மாக்கள் தொடர்பாகும் என்பது இதன் பொருளாகும். இன்ன ஒழுக்கம் உடையார்பால், சீதேவி நீங்க, மூதேவி குடிகொள்வாள் என்பது கருத்து.

அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியால் மூடப்பட் டார்.

(ஷை 94-ம் அதி. சூது செ. 6.)

சூது எனப்படும் மூதேவியால் ஆவேசிக்கப்பட்டவர் வயிறுர உண்ணுதற்கும் வழியின்றி வறுமையான் வருந்துதலோடு இறப்புப் பிறப்பு என்னும் நரக வேதனைக்கும் ஆளாகி உழல்

வர் என்பது இதன் பொருளாகும். நன் முயற்சியால் உய்யும் திறனை நாடாது சூது என்னும் வஞ்சகத் தொழிலை மேற்கொண்டோர் இம்மை மறுமை இரண்டிலும் துன்புறுவர் என்பது கருத்து. சூதான மாயா காரியங்களை விரும்புதலால் அம்மாயையாகிய மூதேவியால் குடிகொள்ளப்பட்டவர் அஃதாவது மாற்றமடையாத அசுத்த தநுவாகிய மருளுடம்புடைய சிவர்கள் நிறை முறையான ஒழுக்கங்களால் உதராக்கினி (மூலாக்கினி), அமல மடையாமையால் அழிபசி உறு பசி என்பன வற்றால் வருந்தி இறந்து பிறவி வலைப்படுவர் என்பது இதன் உண்மை நிலைக்கு ஒப்பிய பொருளாகும். பசியால் நலிதல் கூறப்படவே அதற்கு இனமாகிய பிணி மூப்புக்களால் நலிதலும் கூறப்பட்டது.

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ
[அருள்கெடுத்(து)
அல்லல் உழப்பிக்குஞ் சூது.

(ஷை ஷை செ. 8.)

சூதானது தன்னைப் பயின்றவனது பொருளை (பணம்)யும் இழக்கச் செய்து பொய்ம்மை மேற்கொள்ளச் செய்து அளியையும் அகற்றித் துன்பத்தையும் அடையச் செய்யும் என்பது இதன் பொருளாகும். இச்செய்யுட்களில் "சூது" என்பது கவருடல் என்னும் சூதாட்டத்தோடு மற்றைய வஞ்சகச் செயல்களையும் உணர்த்தி நின்றது. இஃது உண்மை நிலைக்கும் ஒப்பியதாதல் முன்னர்க் கூறப்படும்.

## புகழேந்திப் புலவர்

நள வெண்பா.

காதல்கவறடல்கள்ளுண்டல்பொய்ம்மொழி
[தல்
ஈதல்மறுத்தலிவைகண்டாய் — போதில்
சினையாமைவைகுந்திருநாடாசெம்மை
நினையாமைபூண்டார்நெறி.

(ஷை கலிதொடர் காண்டம் செ. 39.)

[ஈண்டுக் "காதல்" என்பது காமப் புணர்ச்சியை அவாவுதலாகிய அசுத்த காமம் ஆகும்.]

அறத்தைவேர்கோல்லுமருநரகிற்சேர்க்கும்
திறத்தையேகொண்டருளைத்தேய்க்கும் —
[மறத்தையே
பூண்டுவிரோதஞ்செய்யும்போய்ச்சூதை
[மிக்கோர்கள்
தீண்டுவரோஎன்றார்தெரிந்து.

(ஷை ஷை செ. 40.)

உருவழிக்குமுண்மையுயர்வழிக்கும்
[வண்மைத்
திருவழிக்குமானஞ்சிதைக்கும் — மருவும்
ஒருவரோடன்பழிக்குமொன்றல்லசூது
பேர்நுவரோதக்கோர்புரிந்து.

(ஷை ஷை செ. 41.)

ஆயம்பிடித்தாருமல்லற்பொதுமகளிர்
நேயம்பிடித்தாருநெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின்வேறல்லர்என்றுரைப்பதன்றே
வடித்தாரினூலோர்வழக்கு.

(ஷை ஷை செ. 42.)

[ஆயம் — சூதாடு கருவி. காரியம் கருவியை உணர்த்தி நின்றது. வடித்தாரின் நூலோர்—தெளிந்த பெரியோரால் சொல்லப்பட்ட நூல்களை கற்றவர்.]

## வில்லிபுத்தூரர் பாரதம்.

மீதெடுத்தவஞ்சராகிவெகுளிசெய்தல்பிறர்
[பெரும்
கோதெடுத்துரைத்தல்நண்புகொண்டயிர்த்
[தல் கோடிய்வெம்
சூதெடுத்துவிழைதல்உற்றசூள்பிழைத்தல்
[இன்னவே
தீதெடுத்தநூலின்முன்புதீயவென்றுசேப்
[பினர்.

(ஷை சூதுபோர்ச்சருக்கம் செ. 62.)

மேலே காட்டிய பிரமாணங்கள் சூதாடல் என்னும் கவருடலால் உளவாகும் தீமைகளை நன்று வலியுறுத்துகின்றன. கவறு ஆடற்கண் ஒருகால் பெறும் வென்றியால் உளதாகும் ஒட்டப் பொருளானது தூண்டிலில் இட்ட இரைபோலாகி அவ் வென்றி பெற்றவரை அவ் ஆட்டத்தில் மேலும் மேலும் அவா மீதூரச் செய்து இம்மையில் அவர் உடைமை முழுவதையும் அழித்து மறுமையிலும் அவரைத் துன்பத்துக்கே ஆளாக்கிவிடும். இவ்வாறு தன்னைப் பயின்றாரை இருமையும் கெடுத்துத் துன்பம் உழப்பிக்கும் பண்பு பற்றியே கவருடல் எனும் சூதாட்டத்தை விரும்புதல் கூடாது என வற்புறுத்துபவளாய்,

"சூது விரும்பேல்"

என உலகியலுக்கு ஒப்பியவாறு கூறியருளினள் எமது பாட்டி என அறிதற்பாற்று.

சூது என்பது கவருடல் என்னும் விளையாட்டுக்கே-தூலமாக அமையினும், வஞ்சகச் செயல் யாவற்றையுமே குறிப்பதாகும். உலகத்திலே அவரோகண மதியுடைய — கீழ் நிறைப் பொலிவுடைய மாக்கள் எல்லாம் பிறரை அடிப்படுத்தித் தாம் உயிர் வாழ்தற் பொருட்டும் மேன்மை அடைதற் பொருட்டும் சூதையே சூது என்னும் வஞ்சகச் சூழ்ச்சிகளையே தமது முயற்சிகளுக்குக் கருவியாகக் கொள்வர். வஞ்சக வார்த்தைகளால் — வஞ்சகச் செயல்களால் — சித்திரம் கோள் களவு முதலிய தீய தொழில்களால் பிறரை அடிப்படுத்துவான் ஓவாது முயன்று அவரைத் துன்புறுத்துவர்; காரணமின்றியும் சாதுரியமாகக் காரணம் கற்பித்துக் கொண்டு வாது புரிந்து வழக்காடுவர். சலம் என்னும் வஞ்சச் செயலால் — தீவினையால் ஈட்டிச் சேமிக்கப்பட்ட இன்னோர் பொருளும் ஆக்கமுற்ற வாழ்வும் பச்சை மண்ணால் ஆய பாத்திரத்துள் சேமித்து வைக்கப்பட்ட நீர் போல விரைவில் அழிந்து ஒழிய இவரெல்லாம் இறப்பும் பிறப்புமாகிய கொடிய நரகுக்கே ஆளாகியதும் ஆளாவதும் வெள்ளிடை ஆம்.

## குறள்.

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் [பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.

(ஷை 66-ம் அதி. வினைத் தூய்மை செ. 10.)

என்பது தேவர் திருவாக்கு.

[சலம்—வஞ்சனை; தீவினை. ஏமார்த்தல் — ஏமம் செய்தல் — சேமித்து வைத்தல். இரீஇ அற்று — இருக்கச் செய்ததனோடு—ஏமம் செய்ததனோடு ஒக்கும். இஃதே உண்மை நிலைக்கும் ஒப்பியது ஆம்.]

நிறை முறை தழுவிய அறத்தாற்றினால்—தூய வினையால்—பணி செய்தலால் நமது உடலகத்துப் பொருளை ஆக்கமுறச் செய்யாது — போற்றி வாழாது, வஞ்சனையால்—தீவினையால் — நிறை முறை இல்லா வாழ்க்கையால் அசுத்த நிறையையே பெருக்கி வைத்தால், அது பசுமட்கலத்துட் பெய்து ஏமம் செய்து வைத்த நீரானது அக்கலத்தோடு அழிந்து ஒழிதல் போல, அவ் அசுத்த சரீரமாகிய இடமும் பொருளும் ஒருங்கே அழிந்து விடும்—பொருள் இழந்து விடப்படும் என்பது உண்மை நிலைக்கு ஒப்பிய பொருளாகும். அக்கினியால் சுட்டு வைரமாக்கப்பட்ட மட்பாத்திரத்திலன்றி, பசுமட்கலத்து நீர் நிலைத்தல் முடியாது. அஃதாவது பாத்திரமும் நீரும் மித்துருத்துவம் பெறாது ஒன்றனுக்கு மற்றொன்று பகையாகி அழிந்து விடும் — நீர் புறப்பட்டுப் போய்விடும் என்பது. இதுபோலவே அமல அக்கினியால் விமல மாக்கப்பட்ட வச்சிர யாக்கை யாகிய ரக்ஷக தேகத்திலன்றி, அவ் அமல அக்கினி ஆக்கமடையப் பெறாத—"வித்துச் சுட்டு உண்"ணப் பெறாத (திருமந்திரம்) — இந்திரிய நிரோதம் பெறாத—பிணி மூப்புச் சாக்காடுகளுக்கு இடமாகிய அசுத்த தநுவாகிய மருளுடம்பில் பொருள் — உயிர்—சீவன் நிலைக்கமாட்டாது ஒன்றனுக்கு ஒன்று பகையாகி—மித்துருத்துவம் பெறாது அழிந்து ஒழியும் — பிரிந்துவிடும் என்பதாம்; "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆகிய சிவம் பேணப்படமாட்டாது; புரிசடையோன் புறப்பட்டுப் போய் விடுவான்; உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் பெறமுடியாது என்பதாம். நிறை முறையான இல்லற ஒழுக்கத்தால் — சிற்றின்ப நுகர்ச்சியால் விந்து என்னும் பொருளைத் தூய்மை செய்து அதனை விமலமாகிய தமது வச்சிர யாக்கையில் சேமித்து வைத்தவரே — அணு அணுவாக உறையச் செய்தவரே — இந்திரிய நிரோதம் செய்தவரே விமலமான அவ் உடலுயிர் (இடமும் பொருளும்) ஒன்றனை விட்டு ஒன்று பிரியாத அமல மடைந்து அருள் வடிவாய் நித்தியத்துவம் பெறுதற்கு உரியராவர் என அறிதற்பாற்று. இதுவே தத்துவப் பெரியார் துணிபும் வேத உண்மையுமாதல் இதுவரை "வித்தக" வாயிலாக வெளிவந்த கட்டுரைகள் பலவற்றால் வெள்ளிடை விலங்கல்போல விளங்க வைக்கப்பட்டதாதலின் மேலும் விரித்தல் மிகையாகும்.

சூதினால் பிறரை அடிப் படுத்தித் தீமை புரிய முயல்வோரை அத்தகைய சூதினால் வெல்லுதல் என்பது ஒரு வகையான லௌகீக தந்திரம் எனினும் எவ்விடத்தும் எவ்வாற்றானும் சூது என்னும் வஞ்சச் சூழ்ச்சிகளை மேற்கொள்ளாது வாளாங்கு வதிந்து வாய்மையைக் கைக்கொண்டு ஒழுகுவதே சிறந்த அறத்தாறு எனக் கொள்ளற்பாற்று.

## கொன்றை வேந்தன்

" சூதும் வாதும் வேதனை செய்யும் "

என்பது ஔவை திருவாக்கு. சூது போலவே வாதும் துன்பம் தருவது என்பதும், அத்தகைய வாதும் ஒழிதற்பாலது என்பதும் இதனால் நன்று பெறப்படுகின்றன.

"வாது முற்கூறேல்"

(ஆத்திசூடி) எனவும் பணிக்கப்பட்டது. தம் தம் படிப்பு வல்லபத்தால் —கபட நாடக தந்திரங்களால் லௌகிக காரியங்களிலும் சமய சம்பந்தமான விஷயங்களிலும் வாது புரிவார் பலர். இதனால் அவரவர் சாதுரியமான வார்த்தைகள் —படிப்பு வல்லபம் என்பன காரணமாகப் போலியான வெற்றி அடையப்பட்டதாகத் தோன்றினும் உண்மையை நாடி உய்தியடைதல்— மெய்யுணர்ச்சி கைவருதல் —வாய்மையான வெற்றி உளதாதல் முயற்கொம்பே ஆகும். "தர்க்கம்" என வழங்கும் நூற் படிப்பினால் உளதாகும் வாது —வாதம் என்பதனால் உண்மைப் பயன் அடைய முடியாது என்பதனைப் பின் வரும் பிரமாணங்களும் நன்று வலியுறுத்துகின்றன.

## திருமந்திரம்.

வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம்எல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே.

(ஷை வேதச்சிறப்பு செ. 1.)

ஈண்டு வேதம் எனப்பட்டது எம்பெருமான் வடிவமாகிய நித்திய வேதமே ஆம். வாய்மையான வேதமே படிப்பு வல்லபமாகிய தர்க்க வாதத்தை விட்டு—சர்ச்சை யின்றிக் குருவருளால் கண்டு ஓதி உணரப்படுவது என்க. இதன் பெற்றி இதுவரை "வித்தக" வாயிலாக வெளிவந்த கட்டுரைகள் பலவற்றால் நன்று விளக்கி நிறுவப்பட்டதாதலின் ஈண்டும் விரித்தல் மிகையாகும். மதிஞர் — ஆறறிவு பூரணம் பெறுதலால் மனமும் மதியும் ஒன்றப் பெற்ற—வாய்மையான மதிப் பொலிவுடைய மெய்யடியார். வாய்மையான வேதங்களை ஓதி உணர்ந்து நித்தியத்துவம் பெறுதற்கு உரியார் இவரே என்க.

## தாயுமானவர் பாடல்.

கல்லாதபேர்களேநல்லவர்கள்நல்லவர்கள்
கற்றுமறிவில்லாதஎன்
கர்மத்தைஎன்சொல்வேன்மதியைஎன்
சொல்லுகேன்கைவல்யஞானநீதி
நல்லோருரைக்கிலோகர்மமுக்கியமென்று
நாட்டுவேன்கர்மமொருவன்
நாட்டினலோபழையஞானமுக்கியமென்று
நவிலுவேன்வடமொழியிலே
வல்லானொருத்தன்வரவும்திராவிடத்திலே
வந்ததாவிவகரிப்பேன்
வல்லதமிழறிஞர்வரினங்ஙனேவடமொழி
யில்வசனங்கள்சிறிதுபுகல்வேன்
வெல்லாமல்எவரையும்மருட்டிவிடவகை
வந்தவித்தையென்முத்திதருமோ
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலை
பெற்றவித்தகச்சித்தர்கணமே.

(ஷை சித்தர்கணம் செ. 10.)

"கற்றதுங்கேட்டதும்எதுக்காகக்
கடம்படம்என்றுஉருட்டுதற்கோகல்லால்
[எம்மான்
குற்றமறக்கைகாட்டுங்கருத்தைக்கண்டு
குணங்கடந்தஇன்பநிட்டைகூடஅன்றோ.

(ஷை பாடுகின்றபனுவல் செ. 3.)

## ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அருளிய சிவானந்தலகரி.

கடோவாம்ருத்பிண்டோப்யணுரபிச
தூமோக்கிநிரசல:
படோவாதந்துர்வாபரிஹரதிகிம்கோரசம
நம் |
வ்ருதாகண்டக்ஷோபம்வஹஸிதரஸா
[தர்க்கவசஸா
பதாம்போஜம்சம்போர்பஜபரமசௌக்யம்
வ்ரஜஸுதீ: ||

(இ—ள்) நல்ல புத்தியுடையவனே! கடம், மண் கட்டி, புகை, நெருப்பு, மலை, சிலை, நூல் என்பன முதலாகத் தர்க்க நூலில் கூறப்பட்ட வார்த்தைகளைப் பேசுதலால் கொடிய யமனை—மரணத்தை வெல்ல முடியுமா? தர்க்க சாஸ்திர வார்த்தைகளைப் பேசுவதால் ஏன் வீணாகக் கண்டத்தை வறளச் செய்கிறாய்? சிவபெருமானது திருவடித் தாமரைகளைத் தியானம் செய்து — வணங்கி (யமனை வென்று) விரைவாகப் பேரின்ப சுகத்தை (வீடுபேற்றை) அடைவாயாக என்பதாம்.

## பஜகோவிந்தம்.

"பஜகோவிந்தம் பஜகோவிந்தம்
பஜகோவிந்தம் மூடமதே:
ஸம்ப்ராப்தேஸந்நிஹிதேகாலே
நஹிநஹிரக்ஷதி 'டுகிறுங்கரணே."

மந்த புத்தி உடையவனே! மரண காலம் வந்தபோது "டுகிறுங்கரணே" என்னும் வியாகரண சூத்திரம் (அம்மரணத்தினின்றும்) உன்னைக் காத்துக் கொள்ளமாட்டாது அல்லவா? ஆதலால் பரம் பொருளாகிய கோவிந்தனை (நாராயணன்—சிவன்) வணங்குவாயாக! வணங்குவாயாக! வணங்குவாயாக! என்பது இதன் பொருளாகும். "டுகிறுங்கரணே" என்பது சம்ஸ்கிருத வியாகரண சூத்திரங்களுள் ஒன்று. இச்சூத்திரத்தையே வேத மந்திரம் போல மதித்து ஓவாது உருப் போட்டுக் கொண்டிருந்தவன் ஒருவனை நோக்கிக் கூறப்பட்டது இச் சுலோகம் என்க. இவற்றால் வயிற்று வளர்ப்புக்கும் போலிப் புகழுக்கும் உரிய இலக்கணக் கல்வியால் —தர்க்க வியாகரணப் படிப்பினால் —தர்க்க வாதத்தால் உண்மை காண முடியாது என்பதும், சூது போலவே வாதும் வேதனை செய்வது என்பதும் நன்று வலியுறுதல் கண்டு கொள்க.

சம்ஸ்கிருத பாஷையை நிலை கண்டுணர்ந்த ஸ்ரீமத் ஆசாரிய சுவாமிகளது இத்தகைய உண்மைக் கூற்றினை நோக்குவோர், நாத பீடத்தை அநுபவமாகக் கண்ட தத்துவப் பெரியார் திருவாக்காய் மோக்ஷ சாதனத்துக்கு உரியனவாய் அமைந்த அரிய பெரிய மறைகளாகிய வாய்மையான சித்தர் நூல்களில் இலக்கணக் குற்றங் கண்டு, அவற்றை, வித்துவப் பெரியார் சிலரால் உளுற்றப்பட்ட சாத்திரப் பெயர் பூண்ட நூல்கள் சிலவற்றிற்கு இணையல்ல என்று, புறக்கணிக்கத் துணிவர் கொல்லோ?

## கந்தப்புராணம்.

"குற்றமேதெரிவார்குறுமாமுனி
சொற்றபாவினும்ஓர்குறைசொல்வரால்
....................................."

என்பது கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் வாக்கு.

[குறுமாமுனி—அகத்தியமுனிவர்.]

மேல் "சூது விரும்பேல்" என்னும் மந்திரத்தின் உண்மை நிலைக்கு ஒப்பிய பொருள் ஒரு சிறிது கூறி இக்கட்டுரை முடிக்கப்படும். சூதான மாயா காரியங்களை விரும்பாதே என்பது உண்மை நிலைக்கு ஒப்பிய பொருளாகும். மாயை என்பது திரோதானம் எனப்படும் திரோதானம் என்றால் மறைத்தல் என்பர். "சூதான மாயை" என்றனர் பெரியார். இம் மாயையை — மாயா காரியங்களை விரும்பாது இதில் பற்று வையாது இதனை வென்று உய்தி அடைய வேண்டும். இப் பெற்றிகை கூடுவது என்றால் எளிதாகுமா? மாயைக் கடந்து உய்தியடைய முயலுங்கால் அம் மாயா தேவியாகிய முகடி வாளா கிடப்பளோ?

## திருவாசகம்.

"........................................
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின.."

(ஷை போற்றித்திருஅகவல்)

என அருளிச் செய்தார் மாயையின் செயல்களை அநுபவமாக கண்டு உரிய சாதகங்களால் அம்மாயையை வென்று நித்தியத்துவம் பெற்ற மணிவாசகப் பிரபு. திரோதானம் என்னும் சூதான மாயையை அறிய முடியாமல் மெய்யடியார் அடைந்த துன்பங்களுக்கு அளவில்லை என்பது அவ்வவர் பாடல்களால் நன்று புலப்படுகின்றது. அத்

திரோதானத்தை அறிய முயன்று அவர் அநுட்டித்த சாதகங்களிலேயே அத்திரோதானம் மறைந்து நின்று அவரைக் கெடுத்து விடவும், அதனால் அவர் மனச் சோர்வு படாமல்—தமது ஊக்கத்தைக் கைவிடாமல் மதி வைராக்கியத்தோடு பணிசெய்து கிடந்து நல்லுணர்ச்சி முதிர்ச்சி யடைந்து அத்திரோதானக் கடலை நீந்தி நீந்தி நாயின் நிலைமையினும் மிக்க துன்பமடைந்து அந்தோ! அந்தோ! என அழுது அழுது செயலற்று நின்ற அவசரத் தன்றோ எம் பெருமான் "அஞ்சேல்" என்றனன்! "அஞ்சேல்" என்று அபயாஸ்தம் அளித்து மேலாம் ஆதாரமான அருணிலையில் அவரை இருக்க வைத்தனன் என்க. திருவருட் சகாயத்தாலன்றி — குருவருளாலன்றி முனைப்பால் கண்டு பிடிக்கும் எவ்வகையான நடை நொடிகளாலும் சூதான மாயையைவென்று நித்தியத்துவம் பெறுதல் முயற்கொம்பே ஆகும். குருவருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் மாயையை நிறை கண்டு பஞ்சீகரணித்தே — உறவு படுத்தியே அதனை வெல்ல வேண்டும். அன்றி அம் மாயையை — சூதை விரும்பி அதன்பால் பற்றுவைத்து ஈடுபடுதலும் அதனை வெறுத்து ஒருபால் ஒதுங்குதலும் அதனை வெல்லும் திறன் ஆகா என்க.

சூதை விரும்பி அதில் பற்று வைத்து அதில் சிக்குண்டு மாண்டு போகாமல் அதனை வெல்வது என்றால் அச் சூதையே கருவியாகப் பெறவேண்டும். அஃதாவது அதனை உறவுபடுத்த வேண்டும் என்பது. சூதைச் சூதால் வெல்லுதல் என்பதன் உண்மை இதுவே என்க. விக்கின விநாயகப் பேறு என்பதும் இதுவே ஆம். விக்கினங்களை (வி) அழகுபடுத்தும் பேறு விக்கின விநாயகப் பேறு எனப்படும். பின் வரும் பிரமாணம் இவ் உண்மையை நன்று வலியுறுத்துகின்றது.

## சுத்த சாதகம்.

சூதானமாயையோரைத்துதிக்கையால்
[எடுத்து மேலாம்
ஆதாரமானஅந்தஅருளினில்இருக்க
[வைக்கும்
தாதாவாய்விருத்தவெற்பிற்றங்கியேபிரகா
[சிக்கும்
பாதாளத்தானைபாதம்பணிந்துபோற்றிடு
[தல்செய்வாம்.

(ஷை விநாயகர்காப்பு)

[சூதான மாயையோர் —திரோதான மாகிய —வஞ்சத் தன்மை உடைய மாயை வலைப்பட்ட சீவர்கள். துதிக்கை என்பது நிறையை —அமல நிறையை உணர்த்தி நின்றது. அது தான் குருவருளால் பெறப்படும் மௌனோபதேசமாகிய பிரணவ உபதேசத்தால் — மகர வித்தையைப் பெற்றுப் பயிலுவதனால் அடைதற்பாலது. நிறையைக் கண்டவரே சைவத்தின் அடியைக் கண்டவராவர். இப் பெற்றி கைவருதலாற்றான் சூதான மாயையை வெல்ல முடியும். அஃதாவது நிறையைக் கண்டு நிறை தழுவி ஒழுகுதலாற்றான் சூதான மாயையைக் கடந்து அருள் நிலையை அடைய முடியும்; மாயையை அருளாக மாற்ற முடியும் என்க. இது பற்றியே இப் பெற்றி கைவரச் செய்யும் அமல ஒளிவடிவினனாகிய—அமல நிறை வடிவினனாகிய — அருள் வள்ளலாகிய குரு நாதன் "துதிக்கையால் எடுத்து மேலாம் ஆதாரமான அந்த அருளினில் இருக்க வைக்கும் தாதா" என்று கூறப்பட்டனன் என அறிதற்பாற்று. பின் வரும் பிரமாணமும் "துதிக்கை" இன்னது என்பதனை நன்று புலப்படுத்துகின்றது.

## திருமந்திரம்.

இடக்கை வலக்கை இரண்டையு மாற்றித்
துதிக்கையா லுண்பார்க்குச் சோரவும்
[வேண்டாம்
உறக்கத்தை நீக்கி உணரவல்லார் கட்(கு)
இறக்கவும் வேண்டாம் இருக்கலுமாமே.

(ஷை 3-ம் தந். கேசரியோகம் செ.2)

இடக்கை வலக்கை என்பன இடைகலை பின்கலைகளையும் துதிக்கை என்பது சுழிமுனையையும் குறிக்கும். புருவமத்தி — மையம் — நிறை கோல்— நிறை எனப்படுவதும் இதுவே ஆம். மாற்றுதல் — அசைவு நிலை சமம் பெறுதல் — விமலமாக்குதல். துதிக்கையால் உண்ணுதல் — நிறை தழுவி நிற்றல் — முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணித்தல். சோர்தல் — அவரோகணம் பெறுதல். விநாயகரது ஐந்து கரமும் பஞ்சக்கரம்—பஞ்சகாரம் எனப்படும். "பஞ்சக்கர ஆனை" என்றனர் அருணகிரி நாதர். (கந்தரநுபூதி) இவை தாம் ஐந்துகாரம். காரம் என்றால் உஷ்ணம் — அக்கினி. அக்கினியே நடு அரசு. பூ, நீர், தீ, வளி, வெளி என்பன பஞ்சகாரம் — பஞ்ச பூதம் எனப்படுவன ஆம். இவை இடைகலை பின்கலை சுழிமுனை என்பனவற்றுள் அடங்கும். பூ, நீர் என்பன இடைகலையிலும் (இடக்கை) கால் வான் என்பன பின்கலையிலும் (வலக்கை) அடங்கும். இடை பின்கலை என்பன சந்திரகலை சூரியகலை எனப்படும். நடுவு நின்ற அக்கினியாகிய (தீ) அமல நிறை—அமல ஒளி — சிவம் — சுழினை துதிக்கை என்பதில் அடங்கும். பூவும் நீரும் ஒரு புறமாக, காலும் வானும் ஒரு புறமாக, நடுவு நின்ற அமல அக்கினி ஆக்கமுற்று மேல் எழுந்து சுழிமுனையைப் பற்றிக் கெதிபெறுதலே "துதிக்கையால் எடுத்தல்," என்பதன் உண்மைப் பொருளாகும்.

## விநாயகர் அகவல்

"..................................
மாயாப்பிறவிமயக்கமறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும்தெளிவாய்ப்
பொருந்தவேவந்தென்உளம்தனிற்புகுந்து
.................................."

என்னும் ஒளவையார் அருள் வாக்கும். இவ் உண்மையையே உணர்த்தி நின்றது. ஒத்த இடம் இதுவே என்க. "உறக்கத்தை நீக்கி" என்பது அசுத்தமான துயிலை உரியசாதகங்களால் விமலமான துயிலாக—ஆனந்த நித்திரையாக

மாற்றுதல் ஆகும். தூங்காமல் தூங்கல் என்பது இதுவே. "வித்தகம்" தொகுதி 2 இல. 18 இல் "ஒத்த இடத்து நித்திரை கொள்" என்னும் கட்டுரையை நோக்குக. உறக்கம் நீங்கவே அதனோடு தொடர்புடைய அசுத்த காமம், பசி, பிணி, சாக்காடு என்பன நீங்குதலும் அடங்கும். இது நித்தியத்துவ நெறி என்பார்,

"உறக்கத்தை நீக்கி உணரவல்லார்கட்(கு)
இறக்கவும் வேண்டாம் இருக்கலுமாமே."

என்று கூறியருளினர்.

## திருவாசகம்.

"என்னையும் இருப்ப தாக்கினன்"

(ஷ டி திருவண்டப்பகுதி)

என மணிவாசகர் அருளியதும் அறிக. "மேலாம் ஆதாரம்" என்பது கீழ் ஆதாரமே உரிய சாதகங்களால் மேல் ஆதாரமாக — விமல ஆதாரமாக மாறியதை — ஆறு பன்னிரண்டானதை உணர்த்தி நின்றது. இதுவே அருள் நிலை எனப்படுவது. இதுவே விக்கின விநாயகப் பேறு பெற்ற — மாற்றிப் பிறந்த மெய்யடியார்க்குரிய நிலையாகும். இதுபற்றியே "மேலாம் ஆதாரமான அந்த அருளினில் இருக்க வைக்கும்" என்று கூறப்பட்டது. மூலாதாரத்து விளங்கும் அக்கினியானது உரிய சாதகங்களால் அமலமடைந்து சுழிமுனையைத் தாவி விளங்குவதாதலின் — நாதாந்தத்தை அணவிப் பிரகாசிப்பதாதலின் "விருத்த வெற்பில் தங்கியே பிரகாசிக்கும் பாதாளத்து ஆனை" என்று கூறப்பட்டது. உலகில் விளங்கும் விருத்தகிரி என்பது இடுகுறித்தலம். இதுவே விராட் புருடனுக்கு இருதயத்தானம் எனவும் அருமறை உச்சியில் விளங்குவது எனவும் போற்றப்படுவது. அருமறை உச்சி—நாதாந்தம் என்னும் வேதாந்தம். நாதாந்தப் பிழம்பாகிய பரம்பொருளே விருத்தகிரீசுவரன் — பழமலை நாதன் என்க. பாதளத்து ஆனை — மூலாதாரத்து விளங்கும் விநாயகர். பாதம் மேற்பரடு ஜாநு முழந்தாள், தொடை, குதம், கடிமத்தியம் என்பன முறையே அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதலம் எனவும், நாபி, வயிறு இதயம், கண்டம், புருவமத்தியம் நெற்றி, சிரசு என்பன முறையே பூலோகம், புவலோகம், சுவலோகம், மகாலோகம், ஜனலோகம், தபலோகம், சத்தியலோகம் எனவும் ஆகம நூல்களால் கூறப்படுவன ஆகும். ஆதலால் மூலாதாரமே பாதலம் எனப்பட்டது. [இச் செய்யுளின் பொருள் ஒருவாறு சுருங்க உரைக்கப்பட்டது.]

மேலே கூறியவாற்றால் — குருவருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் விக்கின விநாயகப் பேறு பெற்ற—இருவினை ஒப்பு மல பரி பாகம் வாய்ந்த மெய்யடியாரே சூதை விரும்பாது — சூதான மாயா காரியங்களில் பற்று வையாது அம் மாயையாகிய சூதை வென்று நித்தியத்துவம் பெற வல்லார் என்பது வெள்ளிடை மலையாம். ஆதலால் சூதை விரும்பாது அச் சூதான மாயா காரியங்களை நிறை கண்டு உறவு படுத்தியே அதனை வென்று உபரதி பெற்று உய்தியடைய வேண்டும் என்பாளாய்

"சூது விரும்பேல்"

என உண்மை நிலைக்கு ஒப்பியவாறு கூறியருளினள் எமது பாட்டி என அறிக. பின் வரும் தேவர் திருவாக்கும் "சூது விரும்பேல்" என்பதன் உண்மை நிலைக்கு ஒப்பிய பொருளை நன்று வலியுறுத்துதல் கண்டு கொள்க.

## குறள்.

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள் கெடுத் (து)
அல்லல் உழப்பிக்குஞ் சூது.

(ஷ டி 94ம் அதி. சூது செ. 8)

சூதான மாயா காரியங்கள் "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆகிய சிவம் என்னும் செம்பொருளை ஆக்கமுறச் செய்யாது இழக்கச் செய்தலாகிய — உடலை விட்டுப் பிரியச் செய்தலாகிய மரணம் என்னும் பொய்ம்மை நிலையை அடையச் செய்தலோடு அருளையும் கெடுத்துப் பிறப்பு இறப்பு என்னும் அருநரகில் உழலச் செய்யும் என்பது இச் செய்யுளின் உண்மை நிலைக்கு ஒப்பிய பொருளாகும். அல்லல் என்பது இறப்பும் பிறப்புமாகிய நரகத் துன்பத்தை உணர்த்தி நின்றது. "அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை" (குறள்) என்புழியும் அல்லல் இப் பொருட்டேயாதல் அறிக.

## திருவாசகம்.

"ஆதமிலி யான்பிறப் பிறப்பேன்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற்கு...."

(ஷ டி திருவேசறவு செ. 3)

என்னும் மணிவாசகர் திருவாக்கும் பிறப்பும் இறப்புமே நரகம் என்பதனை நன்று வலியுறுத்துதல் கண்டு கொள்க. ஆதலால் சூது விரும்பாது — சூதான மாயையை விரும்பாது — அதில் பற்றுவையாது திருவருளை நாடி — குரு நெறி கடைப் பிடித்து உரிய சாதகங்களால் அதனை உறவு படுத்தி வெல்வதே உய்யும் திறன் என்பது — நித்தியத்துவ நெறி என்பது நன்று கடைப்பிடிக்க. மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் "சூது விரும்பேல்" என்னும் ஔவையார் அமுத வாக்கின் உலகியலுக்கும் உண்மை நிலைக்கும் ஒப்பிய பொருள் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

## அறிவிப்பு.

கடிதர்களின் அபிப்பிராயங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள்.

# உண்மை முத்திநிலை ஆராய்ச்சி மறுப்பு.

"வித்தக"ப் பத்திராசிரியர் எழுதியது.

(தொகுதி 2. 30-ம் வாரத் தொடர்ச்சி.)

## சித்தாந்த சிகாமணி.

தயங்குறுபிராணுபானசமநிலைபெறலான்மூலத்
துயர்ந்தெழுசோதியாதவ்ஒளிமிகுசோதிதானே
வயங்குறுபிராணலிங்கமென்னவேமதிக்கப்பட்ட
தியங்குறுபிராணுபாநநிரோதிகள்என்போர்தம்மால்.

(ஷை பிராணலிங்கித்தலம் செ. 1.)

பிராண அபான நிரோதிகள் — பிராணனையும் அபானனையும் அமலமாக்கிச் சமப்படுத்திய மெய்யடியார். இவை சமமாதலால் அமலமடைந்து ஆக்கமுறுகின்ற — மேல் எழுகின்ற அமல அக்கினியே பிராணலிங்கம் எனப்படுவது. வடு நீங்கிய "கந்து" எனப்படுவது இதுவே ஆம்.

## திருவாசகம்.

"..........................................
நவமான்செஞ்சுடர்நல்குதலும்காமொழிந்து
சிவமானவாபாடி.........................."

(ஷை திருத்தெள்ளேணம் செ. 4.)

என மணிவாசகரால் கூறியருளப்பட்ட "செஞ்சுடர்" என்பதும் இப்பிராண லிங்கமே ஆம். பிராணன் அபானன் என்பனவே கொடிநிலை வள்ளி எனப்படுவன. கொடிநிலை வள்ளி என்பன வடு நிங்கிச் சிறந்துழி — அழுக்காகிய தடிப்பு நீங்கிச் சுத்தமடைந்தபோது நடுவணதாகிய "கந்து" என்னும் உணர்ச்சி வடிவாகிய வாயுவும் வடு நீங்கிச் சிறந்து — குற்றம் தகர்ந்து இவ்விரண்டையும் இருபுறமும் அணைத்துக் கொண்டு மிளிரும். அப்பொழுது இவ் இரண்டும் தெய்வீகம் வாய்ந்தன எனப் போற்றப்படும். இவ்வுண்மேயே பின் வரும் தொல்காப்பியச் சூத்திரத்தால் விளக்கப்பட்டது.

## தொல்காப்பியம்

பொருளதிகாரம் புறத்திணைஇயல் சூத்திரம். 88.

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே.

(இ-ள்) வடுநீங்கு சிறப்பின் முதலன — (உரிய சாதகங்களால்) பாசு என்னும் மாசு நீங்கிச் சிறக்கப் பெற்றமையால் முதன்மையுடையனவாய, கோடி நிலை கந்தழி, வள்ளி என்ற மூன்றும் — கொடிநிலை, கந்தழி, வள்ளி என விதந்து கூறப்பட்ட மூன்றும், கடவுள் வாழ்த்தோடு கண்ணியவரும் — கடவுள் வாழ்த்துடன் ஒருங்கு கருதும்படி அமையும் என்பது.

கொடிநிலை ஒரு புறம். வள்ளி மற்றொரு புறம். கொடி மேலேறும் இயல்புடையது. இதுவே பிராணன் – பிராண வாயு என்க. வள்ளி கீழ் நோக்கும் இயல்புடையது. கிழங்கு வகைகளுள் ஒன்று வள்ளி எனப்படும். இது பூமிக்குள்ளே கீழ் நோக்கிச் செல்லும். இதுவே அபானன் — அபான வாயு எனப்பட்டது. பிராணன் அபானன் என்னும் இரண்டற்கும் இடையில் இருந்து இயங்குவதும் மேல் கீழ் என்னும் அவை இரண்டையும் இயக்குவதும் "கந்து" என்னும் மறையாம். இக்கந்து என்னும் மறை அதிக மாத்திரையுடைய ஆரோகண அவரோகண அசைவினின்றும் திரிந்து நிறையைத் தழுவி நிறையுட் புகுந்த போது கந்து அழிந்தது எனப்படும். கந்தழி (கந்து + அழி) என விதந்து கூறப்படுவது இதுவே என அறிதற்பாற்று.

(தொடரும்)


## "வித்தகம்"

### சந்தா விவரம்.

உள் நாட்டிற்கு முன் பணம் ரூ. 3 0 0
வெளி நாட்டிற்கு ,, ,, ரூ, 4 0 0

வித்தக நிலையம்,
புதுவை.


## பிழை திருத்தம்.

"வித்தகம்" தொகுதி 2 இல. 30.

| பக்கம். | பிரிவு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 6 | 2 | 30 | வாம்மை | வாய்மை |
| 7 | 1 | 13 | நன்நெறி | நன்னெறி |
| ,, | 2 | 25 | என்பது | என்பன |
| 8 | 1 | 29 | என்பர். | என்பாராய் |

Imprimerie "VITTAGAM" — Pondichéry. Le Directeur-Gérant. R. Nagarattinam.